**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை: **திரு. M.மணிகண்டன், M.A., M.L., PG.D. C.F.SC.,**

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் நாள் திங்கட்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி திங்கள் 32ம் நாள்)

**அசல் வழக்கு எண்: 95/2026**

**TNCB11-000503-2026**

R.ஜெயபால் ...வாதி

/எதிராக/

M.மணிமேகலை ...பிரதிவாதி

இவ்வழக்கில் வாதிக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.சண்முகம், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை இந்நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இறுதியாக 17.08.2026ம் தேதி என் முன்பாக வரப்பட்டு வாதி தரப்பு வாதம் என்னால் கேட்கப்பட்டு இன்று வரை பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்...

## தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதியால் தாவாப்படி ரூ.5,23,591/-ம், தாவா கடனுறுதிச்சீட்டின்படி அசல் தொகை ரூ.4,00,000/-க்கு தாவா தேதி முதல் தாவா தொகை வசூலாகும் தேதிவரை மாதம் ஒன்றுக்கு 12 சதவீதம் பின்வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு நீதிமன்றம் நிர்ணயம் செய்யும் வட்டி விகிதத்துடன் தொகை செலுத்த வேண்டியும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதியின் வழக்குரை சுருக்கம் :</u>

2.1) வாதியிடம், பிரதிவாதி கடந்த 11.09.2023–ம் தேதியன்று ரூ.4,00,000/–த்தை கடனாக குடும்ப மற்றும் இதர செலவுகளுக்காக பெற்றுக்கொண்டு, அந்த தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் வட்டி செலுத்துவதாகவும், 6 மாதத்தில் திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்டு, அன்றைய தினமே இரண்டு நபர் சாட்சிகள் முன்னிலையில் ரூ.20/– மதிப்பிலான முத்திரைத்தாளில் வாதி பெயருக்கு பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி கடன் பெற்றுக் கொண்ட 6 மாதம் வரை வட்டி தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும், அதன் பிறகு வாதி, பிரதிவாதியிடம் அசலையும் வட்டியையும் திருப்பித் தர கேட்டு வந்தார் என்றும், ஆனால் பிரதிவாதி, வாதிக்கு அசலோ, வட்டியோ எதுவும் செலுத்தாமல் தவணை கூறி வீண் காலம் கடத்தி வந்தார் என்றும், கடன் தொகையின் வட்டியையோ, அசலையோ திருப்பித் தரவில்லை என்றும், எனவே வாதி கடந்த 26.06.2025–ம் தேதியன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பினை பிரதிவாதி கடந்த 27.06.2025–ம் தேதியன்று பெற்றுக்கொண்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதி வாதியை தொடர்பு கொண்டு 3 மாதத்தில் வட்டியையும், அசலையும் திருப்பித் தருவதாக கூறி கால அவகாசம் கோரினார் என்றும், பிராமிசரி நோட்டின்படி பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றும், அவர் பணத்தை செலுத்தாத காரணத்தால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றா தரப்பினராகியுள்ளார்.

4) வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சி சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் ? இவ்வழக்கு அனுமதிக்கத்தக்தா ? இல்லையா ? என்பதேயாகும்.

இந்த வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்யும்போது பிரதிவாதி, வாதியிடம் ரூ.4,00,000/−த்தை கடனாக பெற்றுக்கொண்டு கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், பிரதிவாதி மேற்படி கடன் தொகையை செலுத்தாத காரணத்தால் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி வா.சா.ஆ.4 பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் சான்றாவணங்களை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும் போது வா.சா.ஆ.1 ஆவணமானது 11.09.2023ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு என்பதும், அந்த கடனுறுதிச் சீட்டை பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், கடனுறுதிச் சீட்டின்படி பிரதிவாதி கடன் தொகையை செலுத்தாததால் பணத்தை திருப்பி செலுத்தும்படி வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளனர் என்றும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று வாதி தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் வாதி தரப்பில்

வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் சாட்சியாக கையெழுத்து செய்த பரமசிவம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ஆனால் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் ஆஜர் ஆகாத நிலையில் அவர் தோன்றாதரப்பினர் ஆகியுள்ள நிலையில் இந்த நீதிமன்றம் பிரதிவாதிக்கு எதிராக எதிரிடை அனுமானம் (Adverse inference) எடுத்துக் கொள்கிறது. ஆகவே வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் 2 விசாரித்தும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்தும் வாதி தரப்பை நிரூபணம் செய்துள்ள நிலையில் வாதிக்கு இந்த தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகையான ரூ.5,23,591/– கொடுக்க வேண்டும் என்றும், மேலும் அசல் தொகையான ரூ.4,00,000/– க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரையில் 12% வட்டி சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும், தீர்ப்பாணை தேதியிலருந்து தொகை முழுவதும் செலுத்தும் வரை 6% பின்வட்டி சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும் இந்த வழக்கை செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.08.17 16:41:10 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 – ஜெயபால்

வா.சா.2 – பரமசிவம்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.09.2023 | அசல் கடனுறுதிச் சீட்டு |
| வா.சா.ஆ.2 | 26.06.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 27.06.2025 | Track Consignment |
| வா.சா.ஆ.4 | - | வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

M MANIKANDAN
Digitally signed by M MANIKANDAN
Date: 2026.08.17 16:41:15 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

**<u>வரைவு / சீரான தீர்ப்புரை</u>**

அ.வ.எண். 95/2026

17.08.2026